**CCE PR**
**NSR & NSPR**

**C**

**ಕರ್ನಾಟಕ ಪ್ರೌಢ ಶಿಕ್ಷಣ ಪರೀಕ್ಷಾ ಮಂಡಳಿ, ಮಲ್ಲೇಶ್ವರಂ, ಬೆಂಗಳೂರು – 560 003**

**KARNATAKA SECONDARY EDUCATION EXAMINATION BOARD, MALLESHWARAM, BENGALURU, 560 003**

**ಎಸ್.ಎಸ್.ಎಲ್.ಸಿ. ಪರೀಕ್ಷೆ, ಜೂನ್ / ಜುಲೈ, 2022**

**S.S.L.C. EXAMINATION, JUNE / JULY, 2022**

ಮಾದರಿ ಉತ್ತರಗಳು

# MODEL ANSWERS

ಸಂಕೇತ ಸಂಖ್ಯೆ : **10-T**

CODE NO. : **10-T**

## ವಿಷಯ : ಪ್ರಥಮ ಭಾಷೆ – ತಮಿಳು
## Subject : First Language — TAMIL

**(ಪುನರಾವರ್ತಿತ ಖಾಸಗಿ ಅಭ್ಯರ್ಥಿ / ಎನ್.ಎಸ್.ಆರ್. & ಎನ್.ಎಸ್.ಪಿ.ಆರ್.)**

**(Private Repeater / NSR & NSPR)**

ದಿನಾಂಕ : 28. 06. 2022 ] [ಗರಿಷ್ಠ ಅಂಕಗಳು : **125**

Date : 28. 06. 2022 ] **[ Max. Marks : 125**

**I. கொடுக்கப்பட்டுள்ள நான்கு விடைகளுள் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் எழுதுதல் :** **10 × 1 = 10**

1. முல்லை நிலம் சிறந்து காணப்படும் காலம்

   (A) துளிர் இலைக் காலம்

   (B) மழைக்காலம்

   (C) குடத்தியர் வணங்கும் காலம்

   (D) கோவர் கூட்டம் மிகுந்த காலம்

*Ans.* :

(A) துளிர் இலைக் காலம்

2. கரை, திரை, குரை எனத் தொடங்கும் அடியில் இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது

(A) எதுகை (B) மோனை

(C) முரண் (D) அந்தாதி

*Ans.* :

(A) எதுகை

3. பைந்தமிழ்

(A) பசும் + தமிழ் (B) பசுந் + தமிழ்

(C) பசுமை + தமிழ் (D) பைந் + தமிழ்

*Ans.* :

(C) பசுமை + தமிழ்

4. வெற்றிலை நட்டான்

(A) காலவாகு பெயர் (B) இடவாகு பெயர்

(C) பொருளாகு பெயர் (D) சினையாகு பெயர்

*Ans.* :

(D) சினையாகு பெயர்

5. குற்றமற்ற வெற்றியைக் கொண்டாடுதல்

(A) வஞ்சி (B) வாகை

(C) காஞ்சி (D) வெட்சி

*Ans.* :

(B) வாகை

6. இலங்ங்கு என்பது

(A) உயிரளபெடை (B) ஒற்றளபெடை

(C) குற்றியலுகரம் (D) குற்றியலிகரம்

*Ans.* :

(B) ஒற்றளபெடை

7. செப்பலோசை உடையது

(A) வெண்பா (B) ஆசிரியப்பா

(C) வஞ்சிப்பா (D) கலிப்பா

*Ans.* :

(A) வெண்பா

8. செய்யுளுக்கே உரியது

(A) பெயர்ச் சொல் (B) வினைச் சொல்

(C) உரிச் சொல் (D) இடைச் சொல்

*Ans.* :

(C) உரிச்சொல்

9. முரண் தொடை

(A) இரவும் பகலும் (B) பேரும் புகழும்

(C) சீரும் சிறப்பும் (D) செல்வமும் செழிப்பும்

*Ans.* :

(A) இரவும் பகலும்

10. நான்கு சீர்களைக் கொண்டது

(A) குறளடி (B) சிந்தடி

(C) அளவடி (D) நெடிலடி

*Ans.* :

(C) அளவடி

**II. முன்னுள்ளதைப் போன்று பின்னுள்ளதை நிரப்புதல்** **5 × 1 = 5**

11. செய்யுளைச் சொல்லால் அழகுபட புனைவது சொல்லணி;
செய்யளைப் பொருளால் அழகுபட புனைவது : ........................... .

*Ans.* :

பொருளணி

12. முல்லைக்குத் தேர் ஈந்தான் பாரி;
ஔவைக்கு கனி கொடுத்தான் : .......................... .

*Ans.* :

அதியமான்

13. சுமந்த மக்கள் - பெயரெச்சம்;
சுமந்து சோர்ந்தான் : .......................... .

*Ans.* :

வினையெச்சம்

14. தீயினால் சுட்ட புண் ஆறும்;
நாவினால் சுட்டது : .......................... .

*Ans.* :

ஆறாது

15. கன்று வருடி மடி சுரக்கும் பசு;
பாலை வார்த்தாலும் விடம் குறைக்காது : .......................... .

*Ans.* :

பாம்பு

**III. ஒரு தொடரில் விடை தருதல் :** **8 × 1 = 8**

16. மாணிக்கவாசகர் சிவனை எவ்வுருவில் தோன்றுவதாய்க் கூறுகிறார்?

*Ans.* :

ஒளி உருவில் தோன்றுவதாய் மாணிக்கவாசகர் கூறுகிறார்.

17. யாரைக் கண்டதும் நிலம் என்னும் நல்லாள் நகுவாள்?

*Ans.* :

எம்மிடத்தில் ஏதுமில்லை என்று சோம்பி இருப்பாரைக் கண்டு.

18. நற்பண்புகள் நிறைந்தவனாக்குதல் யாருடைய கடமை?

*Ans.* :

தந்தையின் கடமை

19. பாரதியார் கூறும் விந்தை மனிதர் யார்?

*Ans.* :

வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டி வைப்போம் என்பவர்.

20. மனித யந்திரங்கள் எவற்றால் ஆனவை?

*Ans.* :

மூளையால் ஆனவை

21. மிருகங்களுக்கு மருத்துவமனை நிறுவிய மன்னர் யார்?

*Ans.* :

அசோக மன்னர்

22. பாமர மக்களின் விருப்பமான விளையாட்டு எது?

*Ans.* :

விடுகதை

23. கிராமத்தினர் பெயர் சொல்லி அழைத்த பறவைகள் யாவை?

*Ans.* :

ஆக்காட்டிக்குருவி, அக்காக் குருவி.

**IV. மூன்று அல்லது நான்கு தொடர்களில் விடை தருதல் $15 \times 2 = 30$**

24. புகழையும் இன்பத்தையும் தரவல்லது எது என்கிறார் வள்ளுவர்?

*Ans.* :

i) அறவழியில் பெறும் இன்பமே. இன்பம்

ii) அறமல்லாத பிறவழியில் பெறுவது துன்பம் அறவழியில் பெறும் இன்பமே புகழைத் தரும்.

25. பிரமன் இராவணனுக்குக் கொடுத்த சாபம் யாது?

*Ans.* :

i) உன்னை விரும்பாத பெண்ணை நீ வலிந்து தொட முயன்றால்

ii) உன் பத்து தலைகளும் சுக்கு நூறாய் வெடித்து சிதறி விடும்.

26. காளைகளுக்கு சொல்வது போல் மக்களுக்குப் பட்டுக் கோட்டையார் கூறுவது என்ன ?

*Ans.* :

i) பழைய போக்கிலேயே போனால் பயனில்லை.

ii) மூளையைப் பயன்படுத்த வேண்டும்.

27. திரு.வி.க வை ஒரு வானம்பாடி என எவ்வாறு கூறலாம் ?

*Ans.* :

i) யந்திரமும் அல்லர், காற்றாடியும் அல்லர் திரு.வி.க. ஒரு வானம்பாடி

ii) தமிழகம் தழைக்க, உலகமே உய்யப் பொதுமை மழை பொழியுமாறு வாழ்த்தும் வானம்பாடி.

28. இளைஞன் தன்னை எதைப் போன்று வழி நடத்திக் கொள்ள வேண்டும் என்று வைரமுத்து கூறுகிறார் ?

*Ans.* :

i) கழுதையின் வாயருகில் கேரட்டைக் காட்டிக் கொண்டே போவதைப் போல

ii) இலட்சியத்தைக் காட்டிக் கொண்டே உன்னை நீ வழி நடத்து.

29. பம்பன் இயற்றிய நூல்கள் யாவை ?

*Ans.* :

i) ஆதிபுராணம்

ii) விக்கிரமார்ச்சுன விஜயம் (அல்லது) பம்ப பாரதம்.

30. தீப்பெட்டி ஆபிஸில் இருந்து திரும்பிய பஸ்கள் எவ்வாறு குழந்தைகளை வெளியே தள்ளியது ?

*Ans.* :

i) கரும்புத் துண்டைமென்று சாறை விழுங்கிவிட்டு சக்கையைத் துப்புவது போல

ii) காலித் தூக்கு சட்டிகளை வீசிக் கொண்டே பஸ்ஸிலிருந்து குதிக்கிறார்கள்.

31. இறந்தகாலம் பற்றி வைரமுத்து கூறுவது யாது ?

*Ans.* :

i) இறந்த காலத்தில் கட்டப்பட்டதுதான் தாஜ்மஹால். அந்த இறந்த காலம் தாஜ்மஹால் மேல் வாழ்ந்து கொண்டிருக்கிறது.

ii) திருவள்ளுவரின் இறந்த கால உழைப்பும் முயற்சியும் தான் திருக்குறளாக நம்மில் வாழ்ந்து வருகின்றது.

32. மோனை நயத்துடன் கூடிய விடுகதை ஒன்றை எழுதுக.

*Ans.* :

i) அழகு அழகாய்ப் பூப்பூக்கும்

அம்மாடி என்று காய் காய்க்கும்

அது என்ன?

ii) நெருஞ்சி

33. அடி என்றால் என்ன? அதன் வகைகளைக் கூறுக.

*Ans.* :

i) தளைகள் ஒன்றும் பலவும் அடுத்து வருவது

ii) ஐந்து வகை, குறளடி, சிந்தடி, அளவடி, நெடிலடி, கழிநெடிலடி.

34. மேலைநாடுகளில் உரையாடல் கலை எவ்வாறு மதிக்கப்படுகிறது?

*Ans.* :

''உயர்ந்தோர்'' இலக்கியக் கலையாக உரையாடல் கலை மதிக்கப்படுகிறது.

35. யாப்பின் உறுப்புகள் யாவை?

*Ans.* :

எழுத்து, அசை, சீர்

தளை, அடி, தொடை.

36. கிராமத்தின் பரம்பரைத் தொழிலாளர்கள் ஏன் கிராமத்தை கைவிட்டனர்?

*Ans.* :

i) கிராமத்தில் கொடுக்கும் கூலி கட்டாது

ii) நகரத்தில் கிடைக்கும் கூலித்தொகை கிராமத்தில் கிடைக்காது.

37. வெண்பாவின் இலக்கணம் யாது?

*Ans.* :

i) செப்பல் ஓசை உடையது

ii) ஈற்றடி முச்சீராகவும், ஏனைய அடிகள் நான்கு சீர்களாகவும் அமைத்து வரும். வெண்சீர் வெண்டளையும், இயற்சீர் வெண்டளையும் மட்டும் கொண்டு வரும்.

38. பூமியின் வெப்பம் அதிகரிப்பதால் ஏற்படும் பாதக விளைவுகளைக் குறிப்பிடுக.

*Ans.* :

i) வடதுருவம் தென் துருவம் இங்கேயெல்லாம் இருக்கிற பிரம்மாண்டமான பனிக்கட்டிகள் உருக ஆரம்பிக்கும்

ii) கடல் மட்டும் உயரும். பல தீவுகள் மூழ்க வேண்டிய நிலைமைக்கு ஆளாயிடும்.

**V. ஐந்து அல்லது ஆறு தொடர்களில் விடை எழுதுதல் :** **6 × 3 = 18**

39. அறன் வலியுறுத்தல் குறித்து வள்ளுவர் கூறுவனவற்றை விளக்குக.

*Ans.* :

i) அறம் செய்வது சிறந்த செல்வம்

ii) அறச் செயலை நாம் முடிந்தவரை இடைவிடாது செய்ய முடிகிற இடங்களிலெல்லாம் செய்தல் வேண்டும்.

iii) பொறாமை, பேராசை, கடுங்கோபம், கடுஞ்சொல் ஆகிய நான்கினையும் நீக்கிச் செய்கின்ற செயலே அறமாகும்.

40. தாய், தந்தை, கொல்லன், அரசன், மகன் செய்ய வேண்டிய கடமைகளாகப் பொன்முடியார் வழிநின்று விளக்குக.

*Ans.* :

i) மகனை பெற்று வளர்த்தல் - தாய்

ii) நற்பண்புகள் நிறைந்தவனாக்குதல் - தந்தை

iii) வேல்வடித்து கூர்மையாக்கித் தருவது - கொல்லன்

iv) வெற்றியோடு மீளுவது - மகன்

41. நிலக்கரி தரும் நன்மைகளை எழுதுக.

*Ans.* :

i) தொழிற்சாலைகளை இயக்குதல்

ii) அனல்மின் தயாரிக்க உதவுதல்

iii) சாலைகளை அமைக்கத் துணையாக இருத்தல்.

42. கிராமத்துப் பெண்குழந்தைத் தொழிலாளர் பற்றி கி.ராஜநாராயணன் என்ன கூறுகிறார்?

*Ans.* :

i) பெண்குழந்தைகள் மீது வெயில்பட்டுப் பல வருஷங்கள் ஆகின்றன

ii) அரக்கு வீட்டில் இருட்டில் வளர்க்கப்பட்ட முளைப்பாரிகள் போல் வெளுத்துக் காணப்படுகிறார்கள்.

iii) மாலையில் தெருவிளக்கடியில் உட்கார்ந்து தீப்பெட்டியை ஒட்டும் போது மட்டும் வெளிக்காற்று படும்.

43. கடுகு உள்ளத்தாரைப் பற்றி பாரதிதாசன் எவ்வாறு சாடுகிறார்?

*Ans.* :

i) தான் உண்டு, தன் வேலை உண்டு என இருப்போர் மற்றவர்களைப் பற்றி மருந்துக்குக் கூட சிந்திக்காதவர்

ii) தன் மனைவி தன் மக்கள் என இருபத்து நான்கு மணிநேரமும் தன்னல உணர்வுடனே வாழ்ந்து வருவோர்.

44. இளைஞன் பாறையில் மோதிய பந்தாய்த் திரும்பி வருவதால் உண்டாகும் விளைவுகள் யாவை?

*Ans.* :

i) பதினேழு வயிதிலிருந்து இருபத்திநான்கு வயதிற்குள் தனது இலட்சியத்தை தீர்மானித்துக் கொள்ள வேண்டும்.

ii) இல்லையெனில் பாறையில் மோதிய பந்தாய் திரும்பி வர நேரிடும்.

iii) அப்போது படும் அடியினால் முப்பது வயதிலேயே முதுமை வந்துவிடும்.

**VI. குறிப்பு வரைதல் :** **2 × 3 = 6**

45. திருக்குறள்

*Ans.* :

திருக்குறள் - இயற்றியவர் திருவள்ளுவர்

மொத்தம் - 1330 குறட்பாக்கள்

அதிகாரம் - 133

அதிகாரத்திற்கு - 10 குறட்பாக்கள்

திருமறை, உலகப் பொதுமறை எனப் போற்றப்படும் நூல்.

அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால் என்ற மூன்று பிரிவுகளைக் கொண்டது.

46. கவிப்பேரரசு வைரமுத்து

*Ans.* :

பிறந்த ஊர் - வடுகப்பட்டி

தேசிய விருது பெற்றவர்.

எழுதிய நூல்கள் பல அவற்றில் ஒன்று

'சிற்பியே உன்னைச் செதுக்குகிறேன்'

உயரிய விருதான பத்மஸ்ரீ விருது பெற்றவர்

திரைப்படங்களுக்கு பாடல்கள் பல தந்தவர்.

**VII. கீழ்வரும் அணியைச் சான்றுடன் விளக்குதல் : 1 × 3 = 3**

47. வேற்றுமை அணி

*Ans.* :

i) இரு பொருளுக்கு இடையே உள்ள ஒப்புமையைப் புலப்படுத்தும் வண்ணம் இரண்டையும் ஒன்றாகக் காட்டி பின் அவ்விரண்டிற்கும் உள்ள வேற்றுமையைக் கூறுவது.

ii) (எ.கா.) தீயினாற் சுட்டபுண் ....

........ சுட்டவடு

**VIII. இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக : 4 × 3 = 12**

48. ''மரம் வளர்த்தால் நரகம் இல்லை''.

*Ans.* :

இடம் : தென்கச்சி கோ. சுவாமிநாதன் எழுதிய 'சுற்றுச்சூழல்' என்ற உரைநடையில் இடம் பெற்றுள்ளது.

விளக்கம் : கி.பி. 17ம் நூற்றாண்டிலே எழுதப்பட்ட நூல் 'நீதிசாரம்' அவற்றில் எழுதப்பட்டதே 'மரம் வளர்த்தால் நரகம் இல்லை' அவை ஓலைச் சுவடியா இருக்கு. தமிழ்நாடு தொல்லியல் துறை தர்மபுரியிலே அதைக் கண்டுபிடிச்சு எடுத்திருக்கு.

49. ‘‘நனியுண்டு நனியுண்டு காதல் - தமிழ்
நாட்டினர் யாவர்க்குமே தமிழ் மீதில்’’

*Ans.* :

இடம் : மொழி வாழ்த்து - பாடல்
பாரதிதாசன் - இயற்றியது.

விளக்கம் : தமிழ்மொழியின் சிறப்பு வேறு மொழிகளில் இல்லை. தமிழ்மொழி மீது தமிழ்நாட்டினர்க்கு பற்றும், காதலும் மிகவும் அதிகம் உண்டு.

50. ‘‘அப்படிப்படும் அடியினால் முப்பது வயதிலேயே
உனக்கு முதுமை வந்துவிடும்’’

*Ans.* :

இடம் : கவிப்பேரரசு வைரமுத்துவின் படைப்பு இலட்சியம் - என்ற உரைநடையில்

விளக்கம் : உனது இலட்சியம் எது என்று தீர்மானிக்காவிட்டால் பாறையில் மோதிய பந்தாய் திரும்பி வர வேண்டியிருக்கும். அப்படிப்படும் அடியினால் முப்பது வயதிலேயே உனக்கு முதுமை வந்துவிடும்.

51. ‘‘பட்டினி கிட பலா வையே உண்பதென்று’’.

*Ans.* :

இடம் : ‘இன்றைய களாவும்’ ‘நாளைய பலாவும்’ ஆசிரியர் ஈரோடு தமிழன்பன்

விளக்கம் : இன்றைய களா சிறந்தது என்று யார் சொன்னது. உன் பலாக்களைப் பறிப்பவன் ஓதியது களா என்றால் களாதான் கதி. பட்டினி கிட விரதம் கொள் சந்திப்பது சாவுதான் என்றாலும் பலாவையே உண்பது என்று முடிவு செய்.

**IX. கீழ்வரும் பழமொழியை விளக்குதல் : 1 × 3 = 3**

52. ‘‘ஞாயிற்றைக் கை மறைப்பார் இல்’’.

*அல்லது*

‘‘அகத்தின் அழகு முகத்தில் தெரியும்’’.

*Ans.* :

வானத்து ஞாயிற்றை கையால் மறைப்பவர் இல்லை. அதுபோல பரந்த அறிவாற்றல் உடையவரை இழிவான சொற்களைச் சொல்லி அவர் புகழை மறைத்து ஒளிப்பார் இல்லை.

அல்லது

*Ans.* :

உள்ளத்தில் தோன்றும் இன்பத் துன்பங்களை முகம் காட்டிக் கொடுப்பது போல ஒருவர் செய்யும் நன்மை, தீமையும் அவர் முகமே காட்டி கொடுத்துவிடும்.

**X. அடிபிறழாமல் எழுதுதல் :** **1 × 4 = 4**

53. ''சோதியாய்த் தோன்றும்'' எனவரும் திருவாசகப் பாடல்.

*அல்லது*

''பட்டங்கள் ஆள்வதும்'' என வரும் பெண் கும்மிப் பாடல்.

*Ans.* :

சோதியாய்த் தோன்றும் உருவமே அருவாம்
ஒருவனே சொல்லுதற்கு அரிய
ஆதியே நடுவே அந்தமே பந்தம்
அறுக்கும் ஆனந்த மா கடலே
தீது இலா நன்மை திருவருள் குன்றே
திருப் பெருந்துறை உறை சிவனே
யாது நீ போவது ஓர் வகை அருளாய்
வந்து நின் இணை அடி தந்தே.

- மாணிக்கவாசகர்

அல்லது

*Ans.* :

பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்
எட்டும் அறிவினில் ஆணுக்கிங்கே பெண்
இளைப்பில்லை காணென்று கும்மியடி.

- மகாகவி பாரதியார்

**XI. எட்டு அல்லது பத்து தொடர்களில் விடை தருதல் :** **2 × 4 = 8**

54. பிறர்க்கென வாழ்வோரின் அரும் பெரும் பண்புகளை இளம்பெருவழுதி எவ்வாறு பட்டியலிடுகிறார்?

*Ans.* :

i) பிறர்க்கென வாழும் பண்புடையார் இந்திரனின் அமுதமே கிடைத்தாலும் தனித்து உண்ண மாட்டார்கள்.

ii) வெறுப்பு கொள்ள மாட்டார்கள் சோர்வு இல்லாதவர்கள் அஞ்சுவதற்கு அஞ்சி வாழ்வர்.

iii) புகழ் என்றால் உயிரையும் கொடுப்பர்.

iv) பழி என்றால் உலகமே கிடைப்பதாக இருப்பினும் ஏற்கமாட்டார்கள். இத்தகையராலே இவ்வுலகம் இன்னும் இருந்து வருகிறது.

55. இலட்சியம் பற்றி வைரமுத்து கூறும் கருத்துக்களைச் சுருக்கி எழுதுக.

*அல்லது*

இலங்கையில் சீதை இருந்த நிலை பற்றி அனுமன் கூறியவற்றை எழுதுக.

*Ans.* :

i) இலட்சியம் இல்லாத வாழ்க்கை ஆணியில் தொங்கும் சட்டை மாதிரி உள்ளீடற்றதாகி தள்ளாடும்.

ii) இலட்சியம் என்பது இளைஞர்க்கு சுவாசிப்பதாக இருக்க வேண்டும்.

iii) கழுதையின் வாயருகில் கேரட்டை காட்டிக் கொண்டே போவதைப் போல் இலட்சியத்தைக் காட்டிக் கொண்டே உன்னை வழி நடத்து.

iv) நீ தேர்ந்தெடுக்கும் துறைகள் அல்ல இலட்சியம். நீ ஈடுபடும் துறையினை நீ வாழவைப்பது.

அல்லது

*Ans.* :

i) சீதையை அலையும் அலைகளை உடைய கண்ணீர் ஆகிய கடலின் இடையே கண்டேன்.

ii) பேய்களின் கூட்டம் அஞ்சும்படியான அளவற்ற அரக்கியர்கள் சீதையை சூழ்ந்து இருந்தனர்.

iii) இராமனை பிரிந்த துன்பத்தை உடைய சீதை கற்பின் சிறப்பினால் வானத்தில் உள்ள தேவர்களின் மனைவியர் தொழுவதற்குரிய பெருமையை அடைந்தாள்.

iv) இரக்கம் என்னும் ஒரு பண்பு பெண்ணின் வடிவம் பெற்று கொடுமை மிக்க சிறைக்குள்ளே சிக்கிக் கொண்டதைப் போன்ற தன்மை பெற்றவளாய் இருந்தாள்.

**XII. கீழ்வருவனவற்றை விளக்கி எழுதுதல்** **1 × 4 = 4**

56. ''இந்திய நாடிது என்னுடைய நாடே
என்று தினந்தினம் நீயதைப்பாடு

சொந்தமில் லாதவர் வந்தவர் ஆள
தூங்கிக் கிடந்தது போனது மாள''.

*அல்லது*

''பெண் சுமந்தோன் மண்சுமந்தான் பிட்டுக்காய் அம்மானை
பெண் சுமந்தோன் மண்சுமந்தான் பிட்டுக்காய் ஆமாகில்
மண் சுமந்து மாற்றடியேன் வாய்ந்தனன் காண் அம்மானை
மாவினைத் தீ மேலாக்கு வந்திதனால் அம்மானை''.

*Ans.* :

இந்திய நாடு என்னுடைய நாடு என்று தினந்தோறும் பாடு.

நம் நாட்டுக்குச் சொந்தமில்லாது எங்கிருந்தோ வந்தவர்

நம் நாட்டை ஆள நாம் தூங்கிக்கிடந்தது போதும்

*அல்லது*

*Ans.* :

பெண்ணைத் தலையில் சுமந்த சொக்கநாதன் குளிர்ச்சியைச் சுமந்து வரும் வையை ஆற்றில் பிட்டுக்காக மண் சுமந்தான்.
பாண்டியனால் பிரம்படி ஏன் ஏற்றான் என்றால்
மாவினைத் தீயின் மேல் வைத்து ஆக்கிப் பிட்டு வாணிகம் செய்யும் வந்தியினால்.

**XIII. பின்வரும் பகுதியைப் படித்து கொடுத்துள்ள வினாக்களுக்கு விடை தருதல் :** **2 × 2 = 4**

உயிர்வாழ்க்கைக்கு அடிப்படையாக இருப்பது இயற்கை. நம் உணவு, உடை, உறையுள், உயிர் எல்லாம் இயற்கை தந்த கொடையே. இயற்கை இல்லாமல் வாழ்க்கை இல்லை. இயற்கை வளங்களைப் பயன்படுத்தி நாம் வாழ்கிறோம். இயற்கைக்கு என்று ஓர் ஒழுங்குள்ளது. இந்து ஒழுங்கு பின்பற்றப்படும்போது இயற்கை வளங்கள் அவ்வப்பொழுது புதுப்பிக்கப்படும். தொடர்ந்து பயன்தரும். ஒழுங்கைப் பின்பற்றாமல் இயற்கை வளங்களை நுகரும் முயற்சியில் தாறுமாறாக அவற்றை நாம் அழித்துச் சிதைத்தால் நாளடைவில் அவை முற்றிலும் அழிந்து

போகும். எனவே மக்கள் இனமாகிய நாம் நம்மை அழியாமல் காப்பாற்ற வேண்டுமென்றால் இயற்கை வளங்கட்கு அழிவு நேராமல் காப்பாற்றியே தீர வேண்டும்.

வினாக்கள் :

57. a) இயற்கை தந்த கொடை எது?

b) இயற்கை எதனால் அழிந்து போகும்?

*Ans.* :

a) நம் உணவு, உடை, உறையுள், உயிர் எல்லாம் இயற்கை தந்த கொடை.

b) இயற்கை வளங்களை நுகரும் முயற்சியில் தாறுமாறாக அவற்றை நாம் அழித்துச் சிதைத்தால் நாளடைவில் முற்றிலும் அழிந்து போகும்.

**XIV. மடல் எழுதுதல் :** **1 × 5 = 5**

58. உன் நண்பனுக்கு / தோழிக்கு, ஊரடங்கு காலத்தை பயனுள்ள வழியில் கழித்ததைக் குறித்து மடல் எழுதுக.

*அல்லது*

உனது பகுதியில் தேங்கிக் கிடக்கும் குப்பைகளை அகற்றக் கோரி நகர மன்ற ஆணையருக்கு மடல் எழுதுக.

*Ans.* :

நாள் :

இடம் :

அன்புள்ள நண்பன் /தோழி

கடிதப் பொருள் :

இவண்

எழுதுவோர் பெயர்

பெறுவோர் முகவரி :

*அல்லது*

நாள் :
இடம் :

விடுநர்

அனுப்புநர் முகவரி

பெறுநர்

பெறுவோர் முகவரி

மதிப்பிற்குரிய

கடிதப் பொருள் :

இவண்

எழுதுவோர் கையொப்பம்

**XV. கொடுக்கப்பட்டுள்ள தலைப்புகளுக்கு ஏற்றவாறு, இருபது வரிகளுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுதல் :** **$1 \times 5 = 5$**

59. ''வீட்டு நலமே நாட்டு நலம்''

*அல்லது*

இன்றைய சூழலில் ''இணையப் பயன்பாடு''

*Ans.* :

- தலைப்பிற்கு ஏற்ற முன்னுரை
- தலைப்பிற்கு ஏற்ற பக்கத் தலைப்புகள்
- தலைப்பின் நோக்கம் நிறைவுறும் வகையில் வலியுறுத்தல்
- முடிவுரை